# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60 தொலை பேசி: 23411 நிறுவியது 1947

வள்ளுவர் ஆண்டு 2008 | ற. அவ்வல் 15 | மாசி 23 (6-3-77) ஞாயிறு | புத்தகம் 30 | இதழ் 91



## டெயிலி மிரர் செய்திக்கு கூட்டணி மறுப்பு!

பேச்சுவார்த்தைக்கு தம்மை அழைக்கும்படி பிரதமருக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி கடிதம் எழுதியிருப்பதாக டெயிலிமிரர் ஆங்கில ஏட்டில் (2-3-77) வெளியிடப்பட்டிருந்த முகப்புச் செய்தி முழுக்க முழுக்க பொய்யானது என்றும், இவ்விதம் கூட்டணியின் சார்பில் பிரதமருக்கு கடிதம் எதுவும் எழுதப் படவில்லையென்றும் தந்தை செல்வாவும், கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளையும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.



# மட்டுநகரை முட்டிமோதிய மக்கள் வெள்ளம் கட்டியணைத்து காசி ஆனந்தனை வரவேற்றது!

வெலிக்கடை வெஞ்சிறையிலிருந்து உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் வெளியே வந்த பின்னர், தூங்கிக்கிடந்த சிங்கம் பிடரியை சிலிர்த்துக்கொண்டு எழுந்ததுபோல மட்டுநகர் புதிய நம்பிக்கையுடன் வீறுகொண்டு எழுந்துவிட்டதை 27-2-77 ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு பாட்டாளிபுர மைதானத்தில் திரண்டவெள்ளம் போல் தமிழர் கூட்டம் உறுதிப்படுத்தியது. கவிஞருக்கும் 'சிறைமீண்ட ஏனைய இளைஞர்களுக்கும் வரவேற்பு அளிக்குமுகமாக தமிழ்இளைஞர் பேரவையின் ஆதரவில் —4-ம் பக்கம் பார்க்க



# இடைக்கால ஏற்பாடுகளால் இயக்கம் பலவீனப்படும்!

## வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலேயே உறுதியுடன் நிலைத்து நிற்போம்!

## இளைஞர்களின் கருத்துக்கு மூதறிஞர் செல்வா ஆதரவு!

இன்றைய நிலையில்—வீழ்ச்சியுறும் சிங்கள அரசுடன் இடைக்கால ஏற்பாடுகள் செய்துகொள்வது பற்றி கூட்டணி ஆலோசிப்பது, விடுதலைப் போராட்டத்தைப் பின்தள்ளிவிடுவதுடன், இயக்கத்தை பலவீனப்படுத்திவிடும் என்றும், இடைக்கால ஏற்பாடுகளில் இயக்கம் சிக்கி காலத்தை அவம்போக்காது, முழு விடுதலைக்கான போராட்டத்தை துரிதப்படுத்த வேண்டும் என்றும் தமிழ் இளைஞர்கள் எடுத்துக்கூறிய கருத்தை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா அவர்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டார்.

அத்துடன், அக்கரைப்பற்றில் நடைபெறும் கூட்டணி நடவடிக்கைக்குழுக் கூட்டத்துக்கு தமது உடல்நலக் குறைவு காரணமாக செல்லமுடியாத நிலையிலிருந்த அவர், இடைக்கால ஏற்பாடுகளை தமிழ்மக்கள் விரும்பாததால், அந்த எண்ணங்களை அப்படியே கைவிட்டுவிட்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே கூட்டணி செயற்படவேண்டும் என்பதே தமது கருத்து என்பதையும் நடவடிக்கைக் குழுவுக்கு எழுத்துமூலம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வா அவர்களை தமிழ் இளைஞர்கள், மகளிர்கள், மற்றும் பொறுப்பு வாய்ந்த தமிழ் பிரமுகர்கள் பலர் 28-2-77 திங்க கிழமை மாலை அவரது இல்லத்தில் சந்தித்து, இன்றைய அரசியலில் கூட்டணியின் நிலைபற்றியும், பிரதமர் கூட்டிய தமிழ்பேசும் பா. உ.க்களின் மாநாட்டில் தற்காலிக உடன்பாடுபற்றி பேச கூட்டணி தயாராக இருப்பதாக பிரஸ்தாபிக்கப்பட்டதும், இதனால் தமிழ் மக்களிடையே எழுந்துள்ள மன உழைச்சல்கள், குமுறல்களையும் மனம்விட்டு எடுத்துரைத்தனர். அமைதியாக அனைத்துக் கருத்துக்களையும் கேட்ட மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள், இன்றைய சூழ்நிலையில் இடைக்கால ஏற்பாடுகள் இயக்கத்தை பின்தள்ளிவிடுமென்பதையும், பலவீனப்படுத்திவிடுமென்பதையும் ஏற்றுக்கொண்டார். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே கூட்டணி செயற்படும் என்றும் தெரிவித்தார்.

தமிழ்ஈழத்தை தனியே பிரிப்பதுதான் எமது கொள்கை; அதைப்பற்றி வேண்டுமானால் யாருடனும் எதுவும் நாம் பேசுவோம்; வேறு பேச்சுக்கு இடமில்லையென்றும் தந்தை அவர்கள் குறிப்பிட்டார்.



தந்தையைச் சந்தித்த தூதுக்குழுவில் த. வி. கூ. கொழும்பு கிளைத்தலைவர் ஈழவேந்தன், செயலாளர் —8-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணியே ஒரே இயக்கம்!

# தந்தை செல்வா அவர்களே ஒரே தலைவர்!

# உதயசூரியன் கொடியே ஒரே தேசியக் கொடி!

## தமிழினத்தை குழப்ப முயல்வோருக்கு சிறைமீண்ட இளைஞர்கள் சாட்டை!

ஆண்டுக்கணக்காக அயர்ந்து தூங்கிவிட்டு தேர்தல் வரும் நேரத்தில் தலையைக் காட்டி தமிழினத்தின் ஒற்றுமைக் கோட்டையான தமிழர் விடுதலைக் கூட்டணியை முறியடிக்கவும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் சிறைமீண்ட தமிழ் இளைஞர்களுக்குமிடையே சிண்டுமுடியவும் தொடங்கியிருக்கும் திரு. சி. சுந்தரலிங்கம், திரு வி. நவரத்தினம் போன்ற அரசியல் விரக்தியடைந்த சுயநலத் தலைவர்களுக்கு சிறை மீண்ட இளைஞர்கள் சுடச் சுடப் பதிலடி கொடுத்துள்ளனர்

40 வயதுக்கு மேற்பட்ட எவரும் தேர்தலில் போட்டியிடக்கூடாது; சிறைமீண்ட இளைஞர்கள் தேர்தலில் போட்டியிடவேண்டும்; அப்போதுதான் தமிழ்ஈழம் மலரும்; என்று திரு. சி. சுந்தரலிங்கம் வெளியிட்டிருந்த கருத்துக்கு சிறைமீண்ட இளைஞரும், த. இ. பேரவை அமைப்புச் செயலாளருமான மாவை சேனாதிராசா சுடச் சுடப் பதிலடி கொடுத்துள்ளார். திரு. சேனாதிராசா வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

### சேனாதிராஜா அறிக்கை!

"சிறையிலிருந்து விடுதலை பெற்று தமிழீழ மண்ணில் காலடி வைத்ததிலிருந்து எம்மை நெருக்கிவரும் சக்திகளில் தேர்தலும் ஒன்று. தமிழ்ஈழத்தை தேர்தல் மூலம் பெற்றுவிடமுடியாது. எமது புனித இலட்சியத்தை அடைய தியாகம் செய்யத் தயாரான ஆயிரமாயிரம் வீரர்களை இளைஞர்களைத் திரட்டவேண்டும். அப்பொறுப்பு எம்மிடமுண்டு.

நாம் சிறையிலிருந்து தமிழீழ இலட்சியத்தையடைய பல திட்டங்களை வகுத்தோம். தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைப்பு ரீதியாகப் பலப்படுத்த வேண்டும். தமிழ் இளைஞர் பேரவையை ஒரு சக்தி வாய்ந்த இளைஞர் அணியாக மாற்ற வேண்டும். இது சம்பந்தமாக கூட்டணித் தலைவர்களுடன் தற்போது பேசி வருகிறோம். முழு நேரமாக இயங்கவிருக்கிறோம்.

நாம் விரும்புவது தமிழினத்துக்கு ஒரே கொடி; ஒரே தலைமை; ஒரே அமைப்பு வேண்டும் என்பதே, அது உதயசூரியன் கொடி, ஒரே தலைவர் தந்தை செல்வா, அமைப்பு — தமிழர் விடுதலைக் கூட்டணி, இதன் இளைஞர் அணி, தமிழ் இளைஞர் பேரவை. மகளிர் அணி தமிழ் மகளிர் பேரவை.

தந்தை செல்வாவை நிராகரித்துவிட்டு தன்னுடைய பாதைக்கு வரும்படி கூறுகிறார் திரு. சுந்தரலிங்கம். அதை நான் ஒருபோதும் ஏற்கமுடியாது. என்றைக்கும் தந்தை செல்வாவே என்னுடைய ஒரே தலைவன்.

"தத்தை செல்வா ஈழத் தமிழினத்தின் தமிழர் இலட்சியத்தின் சின்னம் மட்டுமல்ல, உலகத்தமிழ் இனத்திற்குமே வழிகாட்டும் சக்திமிக்க தலைவர். அவருக்கு அடுத்தபடியாக அண்ணன் அமிர்தலிங்கம் தமிழினத்தை வழிநடத்தும் தலைவராக விளங்குகிறார். இவர்களது தலைமையில் நம்பிக்கை வைத்து என்ன தியாகத்தையும் செய்து தமிழ் ஈழ இலட்சியத்தை அடைவதற்கு நாம் சத்தியம்செய்துவிட்டோம். இந்நிலையில் வேறு இயக்கங்களில் ஈடுபடுவதோ, தேர்தலில் போட்டியிடுவதோ எமக்கு நோக்கமுமில்லை; அந்த அவசியமுமில்லை; ஒரே கொடி, ஒரே அமைப்பு என்ற அடிப்படையில் தமிழ் ஈழத்தை அடைவதே எமது நோக்கமாகும். தந்தை செல்வாவின் பாதையைவிட்டு நாம் விலகமாட்டோம்"

"தமிழர் விடுத்லைக் கூட்டணியைப் பலப்படுத்த வேண்டும். தமிழ் இளைஞர் பேரவையை ஒரு சக்தி மிக்க இளைஞர் அணியாக மாற்ற வேண்டும். இந்த இலட்சியத்தை அடையும்வரை வேலைத் திட்டங்களை வகுத்துச்செயல்படவேண்டும் என்பனபற்றியெல்லாம் சிறையில் சிந்தித்துத் திட்டங்கள் தீட்டி வெளியேறியிருக்கிறோம். தற்போது இந் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியிருக்கிறோம்."

### சத்தியசிலன் சவால்!

சுயாட்சிக் கழகத் தலைவர் வி. நவரத்தினம் அவர்களின் சுயநலம் எத்தகையது என்பதை சிறைமீண்ட இளைஞர் சத்தியசிலன், யாழ் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பின்வருமாறு விளக்கினார்:-

"தமிழர் விடுதலைக் கூட்டணிபோட்டியிடும் எல்லாத் தொகுதிகளிலும் சுயாட்சிக் கழகம் வேட்பாளர்களை நிறுத்தும் என்ற செய்தியை இன்று பத்திரிகைகளில் பார்த்தேன். எனக்கு அது ஆச்சரியத்தைத் தரவில்லை.

"தரப்படுத்தலை எதிர்த்து 1971ல் தமிழ் மாணவர் பேரவைநடத்தியமாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை அடுத்து யாழ். முற்றவெளியில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தையும் தமிழ்மாணவர்பேரவை நடத்தியது. அக்கூட்டத்தில் எந்தக் கட்சித் தலைவர்களையும் நாம்

—7-ம் பக்கம்பார்க்க

# உண்மைத் தொண்டர் உமாபதிசிவன்

பஞ்சு போல் நரைத்த தலை—சிங்கம் போல் கர்ச்சிக்கின்றதொனி — யாருக்கும், எதற்கும் எங்கும் அஞ்சாது தனது கருத்தை துணிந்து கூறிடும் ஆண்மை — தஞ்சம் என அடைந்தோரை தாங்கிடும் பண்பு — கொள்கையிலே கட்டித்தங்கம்—உதவி கேட்டு ஓடிவருவோர்க்கு ஓய்வின்றி உதவிடும் சீரிய தன்மை — இத்தனையும் மொத்தமாகக்கொண்டவரும் கருகம்பானையைச் சேர்ந்தவருமான எங்கள் உமாபதிசிவனை இழந்துவிட்டோம்!

அவர் இறந்துவிட்டார் என்பதை இன்னும் நம்பவே முடியவில்லை!

நம் கண் முன்னேயே நடமாடிக்கொண்டிருக்கிறார்! முன் பற்கள் விழுந்துவிட்ட அந்தப் பிள்ளைச்சிரிப்பு இன்னமும் தெரிகிறது; அவர் போடும் அந்த உரத்த சத்தம் இன்னமும் கேட்டபடியேதான் இருக்கிறது.

ஜீ. ஜீ. யின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக யாழ் ஆஸ்பத்திரியில்நோய்ப் படுக்கையிலிருந்து, டாக்டரிடம் ஒரு நாள் 'லீவு' பெற்றுக்கொண்டு கட்சித்தலைமையகத்துக்கு உமாபதிசிவன் வந்திருந்தார். அங்கிருந்தபடியே தொலைபேசியில் கொழும்பிலிருந்த என்னுடன் பேசினார்.

உமாபதி சிவன் பேசுகிறார் என்பதை என்னால் முதலில் புரிந்துகொள்ள முடியவில்லை

அந்த அளவுக்கு சிங்கம் போல முழங்கும் அவரது குரல்ஈனஸ்வர நிலைக்கு மாறிவிட்டிருந்தது.

அப்போதும் கூட—சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சீற்றம் குறையாத நிலையைக் கண்டேன்!

"ஜீ.ஜீ.யின் பூதவுடலை கூட்டணி அலுவலகத்தில் போதிய அளவு நேரத்துக்கு அஞ்சலிக்காக வைக்காமல் இரண்டொரு நிமிடங்களில் கொண்டுபோய்விட்டார்களாம். இதை என்னிடம் கூறிய அவர்—"நான் மட்டும் சுகமாக இருந்திருந்தால் இப்படி நடக்கவிட்டிருக்கமாட்டேன்; அப்படிச் செய்தவனை கிழி கிழியென்று கிழித்திருப்பேன்!" என்று என்னிடம் கூறினார்.

இயலாமையிலும், அப்போதுகூட அவரிடம் இலட்சிய வீரத்தையும் துணிவையும் கண்டேன்!

"நான் விரைவில் யாழ்ப்பாணம் வருகிறேன் — உங்களை வந்துபார்க்கிறேன்" என்று கூறினேன்—

நான் போய்ப்பார்க்குமுன்னர், போய்விட்டார்!

சிலர் வயதில் இளமையுடன் இருப்பார்கள்; ஆனால் உள்ளத்திலோ முதுமை குடிகொண்டிருக்கும்!

ஆனால் உமாபதிசிவனோ முதுமையிலும், இளமைத் துடிப்புடன் விளங்கினார்!

இயக்கத்துடன் ஊறி வளர்ந்தவர் அவர்!

1961ம் ஆண்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது ஓர் அரசாங்கக் காரியாலயம் முன்னர் நடைபெற்ற மறியலுக்கு தலைமை தாங்கி நடத்தியவர் அவர்!

அவசரகாலச் சட்டத்தின் துணைகொண்டுசிங்கள ஆட்சி அந்தப் போராட்டத்தை முறியடித்து தலைவர்களை கைதுசெய்து சிறையில் தள்ளியபோது, அதை எதிர்த்து அப்போது பாடசாலை மறியற் போராட்டத்தை உமாபதி சிவனின் தலைமையில் இளைஞர்கள் மாணவர்கள் நடாத்தினார்கள். இந்த மறியற் போராட்டத்தில் தந்தை செல்வாவின் மகன் திரு. சந்திரகாசன் அவர்களும் (அப்போது மாணவராயிருந்தவர்) கலந்துகொண்டார்.

போராட்டத்திலீடுபட்டிருந்த உமாபதிசிவனையும் ஏனைய மாணவர்களையும், பொலிசார் கைதுசெய்து யாழ் பொலிஸ் நிலையம் கொண்டுசென்று, தலை நரைத்திருந்த உமாபதி சிவனை, அவரது வயது காரணமாகவோ என்னவோ ஒரு புறத்தில் தனியே இருத்திவிட்டு — மாணவர்களை பொலிஸ் வெறிநாய்கள் தாக்கத் தொடங்கினார்கள்!



இதைப் பார்த்துக்கொண்டிருந்த உமாபதிசிவன் சிங்கம் போலச் சீறியெழுந்தார்.

பொலிஸ் நிலையமே கிடுகிடுத்தது!

வாயில் வந்தபடி தும்பு பறக்க பொலிசாரை அவர் வைது தீர்த்தார். இதன் காரணமாக பொலிசார் மாணவர்கள்மீது நடத்திய தாக்குதல் நின்றது.

இப்படி எங்கும் எதிலும் துணிச்சலுடன் முன்னுக்கு நின்றவர் அவர்!

அரசாங்க அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் — இவைகளில் எல்லாம் நியாயத்துக்காக—அவர் நடத்திய போராட்டங்கள் எண்ணிலடங்கா!

அவரது வாழ்க்கையே ஒரு போராட்டமாக அமைந்திருந்தது.

நெற்றிக் கண்ணைக்காட்டினும் குற்றம் குற்றமே என்பது அவரது கொள்கை!

"யூ டிப் ஐ டிப் — யூ நோ டிப் ஐ நோ டிப்" என்பது அவர் அடிக்கடி கூறும் வாசகம் — அதாவது — "நீ மரியாதை கொடுத்தால் நான் மரியாதை தருவேன்; நீ மரியாதை தராவிட்டால் நானும் மரியாதை தரமாட்டேன்" என்பதே இதன் பொருள்!

இதன்படியேதான் அவர் வாழந்தார்.

தமிழ்இளைஞர்கள் வெலிக்கடைவெஞ்சிறையில் சாகும் வரை உண்ணாவிரததில் ஈடுபட்டிருந்தபோது — அதை அதை உலகத்தின் கண்களில் தெரியப்படுத்துவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி நீதிமன்றங்களில் புகுந்து சட்டமறுப்பு பிரசுரம் ஒன்றை விநியோகித்து 1976ம் ஆண்டில் ஒரு போராட்டத்தை நடத்தியது.

யாழ் நீதிமன்றத்தில் தந்தை செல்வா தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றபோது—அதிலே உமாபதிசிவனும் கலந்துகொண்டார்!

இதுவே அவர் கலந்து கொண்ட இறுதிப்போராட்டமாகும்!

தன்னுடைய இறுதிக் காலத்தில் கூட்டணியின் தலைமைச்செயலகத்தில் இருந்து இயக்கப்பணியாற்றியவர் அவர்!

உண்மைத்தொண்டர் உமாபதிசிவன் மறைந்துவிட்டார்; ஆனால் அவர் நினைவு என்றும் நம் நெஞ்சில் வாழும்!

—கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாடே ஒரே குறிக்கோள்!

## பா. உ.க்கள் தீர்க்கதரிசனத்தோடு செயலாற்றட்டும்!

பிரதமர் கூட்டிய மாநாட்டுக்கு தமிழர் கூட்டணி பா.உ.க்கள் சென்றதும், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை விட்டுக் கொடாமல் இடைக்கால தீர்வு பற்றி பேசத் தயாரென அங்கு அறிவித்ததும், வெளிநாடுகளில் எவ்வளவு தூரம் இயக்கம் பற்றி தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தி விட்டிருக்கிறதென்பதை மலேசியாவிலிருந்து நமக்குவந்த பின்வரும் கடிதம் எடுத்துக்காட்டுகிறது.

ஆசிரியர்

சுதந்திரன்

பேரன்புடைய தம்பி கோவை மகேசன் அவர்களுக்கு வணக்கம் பல; வாழ்த்துக்கள்.

எவ்வளவோ வற்புறுத்தி தமிழ் மக்களின் அத்தியாவசியமான ஒற்றுமையை, குறிப்பாக தற்சமயம் நிலவும் அரசியல் சூழ்நிலையைச் சுட்டிக்காட்டி, கைசோராமல் எழுதிக்கொண்டே வருகிறீர்கள். தங்களின் பொறுப்புணர்ச்சியை மிகவும் மெச்சுகிறேன். அப்படியிருந்தும் மக்களிடம் இன்னமும் கருத்துவேற்றுமை பரவலாக காணப்படுகிறதென்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

அம்மையாரைச் சந்தித்த கூட்டணி உறுப்பினர்கள் அவரின் பசப்பு வார்த்தைகளில் எடுபட்டுவிட்டார்களா? 'தமிழர்கள் குறையைப் போக்கத் தயார்' என்ற தலைப்பில் 25 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் 21 பேரை அவர் சந்தித்தார் — தங்களுடைய நோக்கங்களுக்கு அரசியல் சட்டத்தில் உறுதிமொழிகள் அளிக்கப்பட்டு இடைக்கால அரசியல் தீர்வு ஏற்படுமானால், தனிநாடு கோரிக்கையை தாங்கள் எழுப்பப்போவதில்லை என்று கூட்டத்தில் அவர்கள் கூறினர்'' என்று இந்த ஊர் தமிழ் ஏட்டில் படித்தேன். இந்தச் செய்தி உண்மையா? என்னால் நம்பமுடியவில்லை.

கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே ஒருமைப்பாடோ கட்டுக்கோப்போ அறவே இல்லையென்பதைத்தான் இந்தச் செய்தி சுட்டிக்காட்டுகிறது இவ்விடம் வாழும் இலங்கைக் குடிமக்களுக்கு இந்தச் செய்தி வெட்கத்தையும் துக்கத்தையும்தான் கொடுக்கும்.

—எஸ். ரி. தம்பிஐயா

கோலாலம்பூர் மலேசியா
26-2-77

●

அன்புள்ள கோவை அண்ணா!

தனிநாடு அமைப்பதே எமது இறுதி முடிவு என்ற நிலை ஏற்பட்ட பின்னும், அந்த முடிவை எடுத்துக் கூறிய எமது இளைஞர்கள் பலர் சிங்கள ஆட்சியாளரினால் சிறை பிடிக்கப்பட்டு சித்திரைவதை செய்யப்பட்ட பின்னும், எமது தமிழ் பா.உ.க்கள் ஏன் தான் சிறிமா அம்மையாரின் பேச்சுவார்த்தைக்கு இணங்கினார்கள்? போனதுதான் போனார்கள்; அங்கு கனல் பறக்கும் விதத்தில் தனிநாட்டுக்கோரிக்கையே எமது முடிவான எண்ணம் என்பதை மட்டும் பொறிபறக்கப்பேசிவிட்டு திரும்பாமல் தற்காலிக ஏற்பாடுபற்றி பேச சம்மதித்ததானது கட்டுப்பாடு மீறிய செயலாக அல்லவா அமைந்துவிட்டது?

உலகம் முழுவதும் எமது தனி நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவும் அனுதாபமும் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில், பிரிந்திருந்த தமிழ் மறவர் கூட்டம் தனி நாட்டுக் கோரிக்கையின் பேரில் ஒரே தலைமையில் ஒரே கொடியின் கீழ் ஒற்றுமைப்பட்டு விட்ட நிலையில் தனி நாட்டுக் கோரிக்கையை வலியுறுத்தி உலகுக்கு உணர்த்தி அரசினரையே அதிரவைத்த பின்னும் எமது தமிழ் பா. உ.க்கள் தற்காலிக ஏற்பாடு பற்றி சிந்திப்பதும் அதற்கு இணக்கம்தெரிவிக்கும் விதத்தில் பேசியதோடு நில்லாமல் அதன் அடிப்படையில் மீண்டும் கூடுவதற்கு இணக்கமும் தெரிவித்த செயலானது எமது பலவீனத்தையே வெளிச்சம்போட்டு காட்டிவிட்டது.

போனது போகட்டும்; இனி மேலாவது நமது தலைவர்கள் சிந்தனையோடும் தீர்க்கதரிசனத்தோடும் செயலாற்றட்டும்; வட்டுக்கோட்டைத்தீர்மானத்தில் இருந்து ஒரு நூலளவேனும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று அறிவித்துவிட்டு போராட்டத்துக்கு ஆயத்தம் செய்யட்டும். இதைத்தான் ஆயிரமாயிரம் இளைஞர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தொடரட்டும் போராட்டம், முடிவில் கிடைக்கட்டும் தமிழ் ஈழம்!

பறக்கட்டும் உதயசூரியன் கொடி!

ஜே. அழகரெட்டினம்
மட்டக்களப்பு
27-2-77

●

## மக்கள் குரல்

''சிங்களவரசுடன் பேச்சுவார்த்தை'' என்ற சொற்றொடர் தமிழன் காதுகளில்—மனங்களில் எல்லாம் கடந்த கால்நூற்றாண்டு காலமாகத் தேங்கிநின்று புளித்துப்போய்விட்ட சாரமற்ற ஒரு பொருள். மகேந்திரா ஒப்பந்தத்திலிருந்து இன்றுவரை எமக்கேற்பட்ட அனுபவங்களின் வாயிலாக மேற்படி சொற்றொடரின் கருத்து ''நம்மை நாமே முழுமையாக அழித்துக்கொள்கின்றோம்'' என்பதனைத் தவிர, வேறொரு பொருத்தமுடைய கருத்தொன்றிருப்பதாக என்னைப் 'பொறுத்தவரை தோன்றவேயில்லை. இவ்வாறு, கோழைகளாக நாம் அழிவதிலும்பார்க்க வீரர்களாகக் களத்திலே இறங்கிக் காலனின் காலடியை முத்தமிடுதல் மேலானதொன்றாகும்.

அரசினர் ''பேச்சுவார்த்தை'' என்று அழைத்தால், 'ஜனநாயக முறையின் கீழே' நீங்கள் போகவேண்டுமென்றால், போங்கள்—[illegible]விலே கேளுங்கள்.

''இலங்கைத் தீவின்கண் அமைந்துள்ள தமிழீழ நாட்டின் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசியத் தலைவர்களாக, இம்மாநாட்டு உறுப்பினரனைவரும், எம்மை ஏற்றுக்கொள்கின்றனர்'' என்ற தீர்மானத்தை முழுமனதோடு ஏற்கும்படி.

இதற்கு அவர்களிடமிருந்து ''ஆம்'' என்ற பதில் வருமாயின் தீவைப் பிரித்து எமது நாட்டை அமைக்க அப்பதிலே வழி வகுக்கும். இதனை வலியுறுத்தித் தமிழீழ இலட்சியத்தை முழங்கலாம். 'இல்லை' என்ற பதில் கிடைப்பின் உடனேயே அம்மாநாட்டை விட்டு வெளியேறவேண்டும். இதனை மட்டுமே தமிழ் மக்கள் தமது தலைவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக எமக்குத் தலைவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை உண்டு. ஏனெனில் எம்மீது எமக்கு நம்பிக்கை உண்டு. நாம் தமிழீழத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். விரைவில் அமைத்தே தீருவோம். இடைக்கால ஒப்பந்தம் எமக்குத்தேவையில்லை. ஒதுங்கியிருக்கவிரும்புவோர் ஒய்வுபெற விழைவோர் தாராளமாக அவ்வாறுசெய்யலாம். ஆனால், ஓர் வேண்டுகோள். அவர்கள், தாம் நிற்கும் இடங்களிலேயே 'சும்மா குந்திவிடாமல்' சற்று விலகி மற்றவர்களுக்கு வழி விடட்டும். இதுவரை பாடுபட்ட அனைவருக்கும் என்றென்றைக்கும் நன்றிக் கடனுடையோம்.

—க. இராஜமனோகரன்

கட்டுபெத்தை
மொறட்டுவ

●

அன்புள்ள கோவை அண்ணாவுக்கு,

தலைவர்கள் சொல்வதையெல்லாம் செய்வதையெல்லாம், கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றாமல், அவர்களைத் தட்டிக் கொடுக்கவேண்டிய இடத்தில் தட்டிக்கொடுத்தும், தட்டிக்கேட்க வேண்டிய இடத்தில் தட்டிக்கேட்டுக் கொண்டும்வரும் தங்கள் துணிச்சலை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகின்றேன். எம்போன்ற பல்லாயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் இளம்பெண்களின் மனப்பான்மையை அப்படியே பிரதிபலிக்கும் வண்ணம் நீங்கள் சுதந்திரனில் எழுதும் 'அரசியல் மடல்', 'எண்ணம்' என்பன அமைந்துள்ளன.

தமிழ்பேசும் எம்.பிக்களுக்கும், பிரதமருக்கும் நடைபெறப்போகும் பேச்சுவார்த்தையில் த. வி. கூ. [illegible] என்பதைத் தங்கள் ஆசிரியத் தலையங்கத்தின்மூலம் அழகாக, ஆணித்தரமாக எடுத்துரைத்துள்ளீர்கள்.

விடுதலை வேகமும், சுதந்திரத்தாகமும் மிக்க பல தமிழ் இளைஞர்களுக்குப் 'பேச்சுவார்த்தை' என்பது விடுதலை ஆவேசம் என்னும் தீயை அணைக்கும் நீராகத் தான் காட்சி அளிக்கின்றது. விடுதலை உணர்வு கட்டுக்கடங்காமல் கரைபுரண்டோடும் இந்தக் காலகட்டத்தில் 'பேச்சுவார்த்தை' என்பது அவசியம்தானா என்று இளைஞர்களுக்குத் தோன்றுகின்றது. இந்தப் 'பேச்சுவார்த்தைகள்' தமிழ் மக்களின், குறிப்பாகத் தமிழ் இளைஞர்களின் மத்தியில் குழப்பத்தையும், மனதில் ஒருவிதமான தொய்வையும் ஏற்படுத்தத்தான் பயன்படப்போகின்றனவோ என்று நாம் அஞ்சுகிறோம்.

25 வருடகால கசப்பான அனுபவங்கள் எம்மை விடுதலைப் பாதையில் வேகமாக இயங்க வைத்து, தமிழ் ஈழம் காண்பதே நமது இறுதி இலட்சியம் என்ற எண்ணத்தை நமது இதயத்தில் ஆழமாக விதைத்துவிட்டன. அப்படியிருக்கும்போது அற்ப சொற்ப சலுகைகளைத் தந்து நம்மை ஏமாற்ற நினைப்பது முடியாத காரியம்.

'மாநில சுயாட்சி' கிடைக்கக்கூடும் என்றும் பேசப்படுகிறது. ஆனால் அதுகூட எங்கள் விடுதலைத் தீயின் வேகத்தைக் குறையச்செய்யாது. ஒரு காலத்தில் சமஷ்டி முறை அரசமைப்புக்கோரினோம். ஆனால் இன்று அது எங்கள் பாதையில் பழங்கதையாய்ப்போன ஒன்றாகிவிட்டது. மத்திய அரசின் கீழ், கப்பம் கட்டும் சிற்றரசு ஒன்று ஏகாதிபத்திய அரசு ஒன்றுக்குக் கீழ் இருப்பது போன்ற அந்த அமைப்பை ஏற்கவும் இப்போது நாம் தயாரில்லை.

கடைசியாகத் தமிழர்விடுதலைக் கூட்டணி எம். பி.க்களுக்கு ஒரு வேண்டுகோள் தமிழ் ஈழக்கோரிக்கைக்கு குறைந்தபட்சமான எந்த ஏற்பாட்டுக்கும் இணங்க வேண்டாம். தமிழ் ஈழக் கோரிக்கையை ஏற்குமாறு கூறுங்கள் அதை ஏற்றுக் கொள்ளாவிடின், பேசாமல் பேச்சுவார்த்தையில் இருந்து விலகிக்கொள்ளுங்கள். அப்படிச்செய்வதன் மூலம் உங்கள் நேர்மையையும், தமிழ் ஈழக்கோரிக்கையின்மீது உங்களுக்குள்ள அந்தரங்க சுத்தியான இலட்சியப்பற்றையும் தமிழ் மக்கள் மட்டுமல்லாது உலக மக்கள் கூடப்புரிந்து கொண்டு பாராட்டுவார்கள்.

'செல்வி'

ஏழாலை,
18-2-77

சுதந்திரன்
ஆசிரியர்
கொழும்பு-12
ஐயா,

எத்தனை காலம்தான் ஏமாறலாம் அல்லது ஏமாற்றலாம். எங்கள் பா. உ.க்கள் இன்னமும் ஏமாறுகிறார்களா? அல்லது எங்களை ஏமாற்றுகிறார்களா?

தென் இலங்கையிலிருந்து மாறிமாறி ஆட்சிபீடம் ஏறும் இரண்டு கட்சிகளில் எந்த ஒன்றுடன் ஒப்பந்தம் சமரசம் செய்தாலும் அடுத்தது எதிர்த்துப் பிரசாரம் செய்யும் என்பது கடந்த கால அனுபவம்.

பண்டா—செல்வா ஒப்பந்தம்; டட்லி — செல்வா ஒப்பந்தம் இவை கடந்தகால அனுபவம்.

குறிப்பிட்ட இரண்டு கட்சிகளும் ஒன்றுசேர்ந்து ஓர் முடிவுக்கு வந்தால் அது ஒருவேளை ஒப்பேறுமோ என்னமோ அதுவும் சந்தேகம் தான்; ஏனெனில் சமசமாஜ கம்யூனிஸ்டுகள் எதிர் பிரசாரம் செய்து குழப்பலாம்.

தென் இலங்கை கட்சிகளுக்கு ஆட்சிபீடம் ஏற வேண்டும் என்பதுதான் நோக்கம் அதற்கு பிரசார வாய்ப்பை தேடிக்கொள்ளுகின்றன.

இந்த நிலையில் எங்கள் தலைவர்களுக்கு தென் இலங்கை கட்சிகளுடன் என்ன பேச்சுவார்த்தை இருக்கிறது? ஏன் காலத்தையும் நேரத்தையும் வீணாக்கி வீறுகொண்டு எழுந்துள்ள இளைஞர் மத்தியில் சந்தேகத்தையும் மனச் சோர்வையும் உண்டாக்குகிறார்கள்.

வட்டுக்கோட்டைத் தீர்மானமே முடிந்த முடிபாயிற்றே. அதைப் பின்பற்ற விரும்பாத பா. உ.க்கள் இன்னமும் தமிழ் மக்களை ஏமாற்றாமல் தாங்களாய் விலகிக் கொள்வது மேல்.

பேச்சுவார்த்தை என்ற செய்தி வெளியானதிலிருந்து எங்கள் தலைவர்களில் சிலர் சொல்லும் ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் கவனித்தால் தமிழ்மக்களை பகடைக்காய்களாய்வைத்து கொண்டு பாராளுமன்றக் கதிரையில் சீவபரியந்தம் குந்திக்கொள்ள எண்ணுகிறார்கள் போல் தெரிகிறது.

தங்கள் பத்திரிகையே இனவிடுதலையின் முன்னோடியாய் நின்று எங்கள் தலைவர்களை வழிநடத்தி இளைஞர்களின் உறுதிக்கேற்ப நடவடிக்கை எடுத்து ஈழ தமிழ் நாடு காண உதவி செய்வீர்களாக.

பி. மார்க்குப்பிள்ளை
முல்லைத்தீவு

Those who would give up essential liberty to purchase a little temporary safety deserve neither liberty nor safety'' என்ற சுதந்திரன் அடிப்படைத் தத்துவத்தை நமது கூட்டணிப் பா. உ.க்கள் சிலர் மறந்துவிட்டனரா?

—கருணாகரன்,
கொழும்பு-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# வேட்பாளர் நியமனசபையின் பொறுப்பும் கடமையும்!

**வரவிருக்கும் பொதுத்தேர்தல், தமிழ் ஈழத்தையும், தமிழ் தேசிய இனத்தையும் பொறுத்தவரையில் அதிமுககியத்துவம் வாய்ந்த ஒன்ருக அமையவிருக்கிறது. இத்தேர்தலில் தமிழ்ஈழமக்கள் அளிக்கப்போகின்ற தீர்ப்பை எமது அயல்நாடான சிங்கள நாடும், ஏனைய உலகநாடுகளும் வைத்த கண்வாங்காமல் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றன.**

இதற்குக் காரணம்— வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில், இழந்துபோன தனித்தமிழ் ஈழ அரசை மீண்டும் புனரமைக்கும் கொள்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியிடவிருப்பதுதான்! தமிழ் ஈழ அரசை மீண்டும் நிர்மாணிப்பதற்கான மக்களின் அங்கீகாரத்தை தமிழர் விடுதலைக்கூட்டணி எதிர்வரும் பொதுத்தேர்தலில் கோரவிருக்கிறது.

இதுவரை காலமும் ஒற்றையாட்சியென்றும், சமஷ்டியென்றும் இருவேறு திசைகளில் நின்ற தமிழினத்தின் அரசியற் கட்சிகள், ஒரே இலட்சியத்தின் கீழ் ஒன்றுபட்டு—ஒரே கொடியின் கீழ் இணைந்து நின்று 'தனிநாடு' போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்கு தமிழ் ஈழ மக்களின் அங்கீகாரத்தை கோரியும் — தமிழ் ஈழக்கொள்கையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளுகிருர்கள் என்பதை ஜனநாயக களத்தில் நிலைநாட்டவும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி போட்டியிடவிருக்கிறது.

வங்கதேசம் பிரிவதற்கு முன்னர், பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் வங்கதேசத்தின் தேசிய விடுதலை இயக்கமான அவாமி லீக் நூற்றுக்கு நூறு வீதம் வங்க தேசத்தில் மிகப்பெரும் வெற்றியை ஈட்டி உலகின் கவனத்தை தன்பால் ஈர்த்ததுபோல — எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்ஈழத்தில், தமிழ் ஈழத்தின் தேசிய விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியும் நூற்றுக்கு நூறு வீதம் பெருவெற்றியை ஈட்டவேண்டும், இத்தகைய வெற்றியை கூட்டணிக்கு ஈட்டிக்கொடுப்பது ஒவ்வொரு தமிழ் மகனினதும், தமிழ் மகளினதும் புனிதமான கடமையாகும்!

அதேவேளையில் கூட்டணியின் வேட்பாளர் நியமன சபைக்கும் மிகப்பெரிய கடமையும், பொறுப்பும் உண்டு. தகுதியும், ஆற்றலும், மக்களின் நம்பிக்கையை பெற்றவர்களுமான உண்மைத் தொண்டர்களை — இலட்சிய வீரர்களை — வேட்பாளர்களாக பொறுக்கியெடுப்பது கூட்டணியின் பாரிய பொறுப்பாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை பொறுத்தவரையில் —பொதுத்தேர்தலில் போட்டியிடுவது தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் பதவியினுல் ஏதோ ஒரு பெரிய அந்தஸ்து கிடைத்துவிடுகிறது என்பதற்காகவோ — அல்லது தேசிய அரசுப் பேரவையில் பேசி தமிழ் ஈழத்தின் விடுதலையை மீட்டுவிடமுடியும் என்ற நம்பிக்கையுடனே, அல்லது சிங்கள அரசுடன் பேரம் பேசுவதற்காகவோ அல்ல; தேசிய அரசுப் பேரவைக்கு தமிழினத்துரோகிகளும், தமிழின ஒற்றுமைக்கு ஊறு தேடுவோரும் செல்லாமல் தடுப்பதற்கும் தமிழீழ விடுதலைக்குரலை பேரவையில் ஓங்கி ஒலிப்பதற்காகவும் மட்டுமே கூட்டணி சிங்கள நாட்டுப் பாராளுமன்றத்துக்கு செல்லவிருக்கிறது,

இங்கிலாந்துப் பாராளுமன்றத்துக்கு அயரிஷ் பிரதிநிதிகள் எதற்காகப் போனர்களோ—அதேபோலத்தான் சிங்கள நாட்டுப் பாராளுமன்றத்துக்கு தமிழ்ஈழத்தின் பிரதிநிதிகளை அனுப்பிவைக்க வேண்டும் என்பதே கூட்டணியின் நோக்கமாகும்.

அதுவும்—எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர்—கூட்டணியின் சார்பில் தேசிய அரசுப்பேரவைக்கு செல்பவர்களுக்கு தேசிய பேரவைக்கு உள்ளேயிருக்கப் போகும் பணியை விட வெளியே இயக்கப் பணிகளே ஏராளமாக இருக்கப்போகிறது. எனவே அதற்கு ஏற்றவர்களை— துணிந்தவர்களை— தகுந்தவர்களை—பொறுக்கியெடுப்பது கூட்டணி நியமனசபையின் பொறுப்புவாய்ந்த கடமையாகும்.

உண்மையானவர்களை—இயக்கத்துக்கும், இலட்சியத்துக்கும் கட்டுப்பட்டு விசுவாசத்துடன் முழுநேரமும் இயங்கக்கூடியவர்களை—பொதுவாழ்வில் எவ்விதமான கறையும் படியாதவர்களை — மக்களோடு மக்களாக அடித்தளத்தில் நின்று செயல்படக்கூடியவர்களை — சுதந்திரப் போராட்டத்தில் சொத்து சுகங்களை இழக்கவும், சிறை செல்லவும், அடி உதை படவும், உயிர் இழக்கவும் தயாரானவர்களை— பொறுக்கியெடுத்து வேட்பாளர்களாக நியமிக்கவேண்டியது கூட்டணியின் மிகப்பெரிய பொறுப்பாகும்.

**தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் பதவியையே ஏதோ ஒரு பெரியகதிமோட்சமாககருதுபவர்களும் அதற்காகவே கூட்டணிக்கூடாரத்தை நாடுபவர்கள் எவரும் கூட்டணி வேட்பாளர்களாக நியமிக்கப்படக்கூடாது; தேசிய பேரவை உறுப்பினர் பதவியை வெறும் கால்தூசிக்குசமாக, தமிழ்ஈழ விடுதலை இலட்சியத்தையே தன் உயிராகவும் கொண்ட உண்மையான விடுதலை வீரர்களே கூட்டணி வேட்பாளர்களாக நியமிக்கப்படவேண்டும்!**

பழி பாவம் பார்த்தோ — 'பழையவர்கள்' என்ற ஒரே காரணத்தினுலோ பணம் படைத்தவர் என்பதற்காகவோ யாருக்கும் நியமனம் வழங்கப்படக்கூடாது; பா.உ. பதவியை மட்டும் பெறும் நோக்கத்துடன் கூட்டணிக்குள் நுழைந்தவர்களை அடையாளம் கண்டு ஒதுக்கித் தள்ளிவிடவேண்டும். தூய்மையானவர்களையும் நேர்மையானவர்களையும் வேட்பாளர்களாகத்தேர்ந்தெடுத்துத்தரவேண்டும்.

தற்போது இருக்கும் பா. உ.க்கள் ஒருவரையும் வேட்பாளர்களாக நியமிக்காது, புதியவர்களை நியமிக்கவேண்டும் என்று ஒரு கருத்தும் தெரிவிக்கப்படுகிறது. இக்கருத்தை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளாதபோதிலும்— இருக்கும் அனைவரையும் அப்படியே மறுபடியும் நியமிக்கவேண்டும் என்ற கருத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

கடந்த ஏழு ஆண்டுகளாக பா. உ.க்களாக இருந்துவருபவர்களின் பணியை — இயக்கத்துக்கும், இனத்துக்கும் அவர்கள் ஆற்றியுள்ள சேவையை—தனித்தனியே ஆராய்ந்துபார்த்து முடிவு எடுக்க வேண்டியது கூட்டணி நியமனசபையின் பொறுப்பாகும்.

தேசிய அரசுப்பேரவையில் இப்போதிருக்கும் கூட்டணி பா. உ.க்கள் பேரவையில்ஆற்றிய பணி என்ன? இயக்கத்துக்குஅவர்கள் ஆற்றிய பணியென்ன? எத்தனை போராட்டங்களில் கலந்துகொண்டார்கள்? எத்தனை பேர் முழுநேரமாக இயக்கத்துக்கு தங்களை அர்ப்பணித்தார்கள்? எத்தனைபேர் பா. உ. பதவியினுல் தமக்கு கிடைத்த சலுகைகளை இயக்கத்துக்கு வழங்கினுர்கள்? எத்தனைபேர் அடித்தளத்து மக்களோடு நெருங்கிப் பழகினுர்கள்? எத்தனை பேர் மக்களிடமிருந்து விலகிநின்ருர்கள்? எத்தனைபேர் இயக்கக் கட்டுப்பாடுகளை மீறி நடந்தார்கள்? என்பன போன்ற கேள்விகளுக்கு விடைகண்டு — இப்போதிருக்கும் பா. உ.க்களில் யார் யாரை நியமிக்கலாம் — யார்யாரை நியமிக்கக்கூடாது என்பதை தீர்மானிக்க வேண்டிய பாரிய பொறுப்பு கூட்டணி நியமனசபையின் தோள்மீது சுமத்தப்பட்டிருக்கிறது.

கூட்டணியில் பா. உ. பதவிக்காக அல்லது பா. உ. பதவி கிடைக்கும் என்பதற்காக மட்டுமே ஒட்டிக்கொண்டிருப்பவர்கள் யார்? அந்தரங்க சுத்தியுடன் இலட்சியத்துக்காக சலியாது உழைப்பவர்கள் யார்? என்பதை இனங்கண்டு கொள்வதற்குப் இது ஒரு நல்லவாய்ப்பாகும்;

பா. உ. பதவிக்காக, அல்லது பா.உ. பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்து கூட்டணிக் குடைக்குள் சுய நலநோக்குடன் நுழைந்தவர்கள், கூட்டணி நியமன சபை தனது வேட்பாளர் பட்டியலை வெளியிட்டதும் அதில் தமது பெயர் இடம்பெருவிடின் கூட்டணிக்குள்ளிருந்து தாமாகவே வெளியேறி விடுவார்கள். உண்மையான தமிழ் ஈழ விடுதலை உணர்வுடன், அந்தரங்க சுத்தியுடன் கூட்டணிக்குள் சேர்ந்துசெயற்படுபவர்கள் மட்டுமே, தாம் வேட்பாளராக நியமிக்கப்பட்டாலும் நியமிக்கப்படாவிட்டாலும், கூட்டணியின் இலட்சிய வெற்றிக்காகதொடர்ந்து உழைப்பார்கள்!

அந்தரங்க சுத்தியும், தியாக மனப்பான்மையும், இயக்கப்பற்றும் உள்ளவர்கள் யார? இவை அற்றவர்கள் யார்? என்பதை இனங்கண்டுகொள்ளவும் இது ஓர் அருமையான சந்தர்ப்பமாகும்! கூட்டணியை மேலும் தூய்மைப்படுத்தவும் இது உதவும்!

எனவே ''இதனை இதனுல் இவன் முடிக்கும் என்ருய்ந்து
அதனை அவன்கண்விடல்''

என்ற தமிழ் மறையின் வழிநின்று — கண்ணேட்டமின்றி — துலாக்கோல் போற் செயற்பட்டு தகுந்தவர்களை வேட்பாளர்களாக கூட்டணி நியமனசபை பொறுக்கியெடுத்துத் தரும் என்று எதிர்பார்க்கிறேம்.

கூட்டணியின் இறுதித்தீர்ப்பை ஏற்று அதற்குத் தலைவணங்கி —கூட்டணி நியமிக்கும் வேட்பாளர்களின் வெற்றிக்காக மனவேறுபாடுகளை மறந்துஉழைப்பது தமிழ்பேசும் மக்களின் — கூட்டணி ஆதரவாளர்களின் கடமையாகும்!

---

## மட்டுநகரை முட்டி..,

—1-ம் பக்கத் தொடர்

நடைபெற்ற இக்கூட்டத்தில், கண்ணுக் கெட்டிய தூரம்வரை மக்கள் தலைகளாகவே காட்சி அளித்தன.

மட்டக்களப்பின் அரசியல் வரலாற்றில் இதுபோன்றதோர் கூட்டத்தையும், மக்கள்வெள்ளத்தையும் கடந்த பத்து ஆண்டுகளுக்குமேலாக கண்டதில்லையென்று அங்குள்ள அவதானிகள் கருத்துத்தெரிவித்தனர்.

அரசியல் அதிகாரத்தின் ரௌடித்தனங்களுக்கு அஞ்சியும், வழி நடத்துவதற்கு நேர்மையும் உண்மையும் மிக்க தலைவர்கள் போதிய அளவு இல்லாமையினுலும், சோர்வுற்றிருந்த மட்டக்களப்பு தமிழ் மக்களிடையே காசி ஆனந்தனின் வரவு புதிய தெம்பை ஊட்டியிருப்பதையும், நீறுபூத்த நெருப்பாக இதுவரை இருந்து வந்த மட்டுநகர் மக்களின் விடுதலை உணர்வும், இயக்கப்பற்றும் இப்போது மீண்டும் வெளிப்படையாக கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்திருப்பதையும் இக்கூட்டம் எடுத்துக் காட்டியது.

ஆர்வம் பெருக்கெடுத்தோடினுலும், உணர்ச்சி கொப்பளித்தாலும், தாமாகவே கட்டுப்பாடும், அமைதியும் காத்து நின்ற அந்த மக்கள் வெள்ளத்திடையே பெருந்தொகையான பெண்களும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

ராஜாதிராஜனின் ரௌடித்தனங்களுக்குப் பயந்து அரசியல் கூட்டங்களுக்கு செல்வதற்கே கடந்த சில ஆண்டுகளாக அஞ்சியிருந்த தமிழ் மகளிர், இப்போது மீண்டும் துணிவுடன் இக்கூட்டத்துக்கு பெருந்திரளாக வருகை தந்திருந்தது ஒரு பெரிய திருப்பமாக அமைந்திருந்தது.

கூட்டத்துக்கு போதிய அளவு விளம்டரம் செய்யாமலிருந்தபோதிலும் — கூட்டணியின் பெருந்தலைவர்கள் யாரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளாத போதிலும்— ஒலிபெருக்கி உபயோகிப்பது கட்டுப்படுத்தப்பட்டிருந்தபோதிலும் — பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டுவந்திருந்தனர்.

பாட்டாளிபுர மைதானம் முழுவதும் நிரம்பிவழிந்து கோட்டைமுனைப்பாலத்தடி, ராஜேஸ்வரா தியேட்டரடி எங்கும் மக்கள் வெள்ளம் பரவி நின்று பேச்சாளர்களின் உரைகளைக் கேட்டது.

இக்கூட்டத்தில் மட்டக்களப்பின் கூட்டணிப் பிரமுகர்களான சட்டத்தரணி சாம் தம்பிமுத்து, திரு. ஜோசெப், திருமதி சுகுணம் ஜோசெப், திரு. இரா. அம்பலவாணர், திரு. வ. பாலசிங்கம், கவிஞர் முத்தழகு ஆகியோரும், பட்டிருப்பு தொகுதி கூட்டணிப் பிரமுகர் பூ கணேசலிங்கம், கல்குடா தொகுதி கூட்டணி செயலாளர் வ. கோவிந்தசாமி இளைஞர் பேரவையைச் சேர்ந்த அன்ரன், செல்வச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டதும் உரையாற்றியதுமான காட்சி— எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் நாம் ஒன்ருதல் கண்டே என்ற பாரதிதாசன் கவிதை வரிகளை நினைவூட்டியது.

த. இ. பேரவையைச் சேர்ந்த வேணுதாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறப்புப்பேச்சாளர்களாக திருவாளர்கள் ஈழவேந்தன், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், வண. ஜோசெப்மேரி அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

இக்கூட்டத்தின்போது நிறைய மக்கள் சூட்டிய மலர் மாலைகளுடன் கவிஞர் காசி ஆனந்தன் மக்கள் வெள்ளத்திடையே நிற்பதைதான் முன்பக்கத்திலுள்ள படத்தில் காணுவீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவன் தமிழனை நம்பவில்லை தமிழன் சிங்களவனை நம்பலாமா?

தமிழன் சிங்களவனை நம்பவேண்டும். சிங்களவனோடு சேர்ந்துதான் உரிமைகளைப்பெறவேண்டும். என்று சிலர் சொல்கிறார்கள். சிங்களவன் தமிழனை நம்பினால் தமிழன் சிங்களவனை நம்புவதில் ஓரளவாவது நியாயம் இருக்கலாம். ஆனால் சிங்களவன் தமிழனை நம்புகிறானா? யாழ்ப்பாணம்—வவுனியா—மன்னார் — திருக்கோணமலை மட்டுநகர் அம்பாறை ஆகிய தமிழ் ஈழத்தின் எல்லா மாவட்டங்களிலும் அரசாங்க அதிபர்களாக — சிங்களவர்களையே அரசு வைத்திருக்கிறது. தமிழ் அரசாங்க அதிபர்களையும் தமிழ் ஈழத்தில் வைத்தால் அப்பகுதி மக்களின் உணர்ச்சிகளோடு அவர்கள் ஒத்து ஓடுவார்கள் என்று அரசு ஐயப்படுகிறது. தமிழர்களை சிங்கள ஏகாதிபத்தியம் நம்பவில்லை. தமிழனை நம்பாத சிங்களவனைத் தமிழன் நம்பலாமா?"

இவ்வாறு மட்டக்களப்பு பாட்டாளி புரத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசிய கவிஞர் காசி ஆனந்தன் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

"தமிழினம் இன்று ஒரே கூட்டமாய் நிற்கிறது. ஒரே குரலை எழுப்புகிறது. ஒரே திசையிலே செல்கிறது! நமது விடுதலைப்பயணத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க நிலையாகும்! இந்த நிலையில் எந்த ஆட்டமும் ஏற்படாதவாறு நாம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணத்தான் மட்டக்களப்பான்' என்ற மக்கி மடிந்துபோன புதை குழிக் குரலை — மீண்டும் குழி தோண்டி வெளியே எடுத்துப் பிணவாடை பரப்ப மட்டக்களப்பில் இப்போது சிலர் முயல்வதாக நான் அறிகிறேன்.

"யாழ்ப்பாணத்தான் தன்னுடைய மண்ணைக் கவனித்துக் கொள்கிறான் — அரசாங்கத்தின் காலைப் பிடித்து பாலம் — பள்ளிக்கூடம் — சந்தை — விளையாட்டரங்கு எல்லாம் கட்டி தன் ஊரை அழகுபடுத்துகிறான் — மட்டக்களப்பானும் அவனைப்போல் அரசின் காலைப்பிடித்து ஊரை முன்னேற்ற வேண்டும்" என்று இங்கு சிலர் பேசுகிறார்களாம் — நான் அவர்களுக்கு ஒன்று சொல்லி வைப்பேன்—

யாழ்ப்பாணத்தான் இன்று பாலம் கட்டிக் கொண்டிருக்கவில்லை— அதைத் தகர்க்க முயன்றதாக கைதுசெய்யப்படுகிறான். பண்ணைப் பாலத்தில் குமாரசூரியரின் காரைக் கவிழ்க்கும் நோக்கோடு கைகுண்டு வைத்ததாக சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாண இளைஞன் கைதுசெய்யப்பட்டிருக்கிறான். ஊரில் ஓடுவதற்கு பஸ்கள் கேட்கவில்லை; அவன் — யாழ்ப்பாணத்தில் ஐந்து பஸ்களுக்கு தீவைக்கப்பட்டதாக சிறையிலிருந்தபோது கேள்விப்பட்டேன்; யாழ்ப்பாணத்தில் ஓடும் புகைவண்டிக்கு விசேட பெட்டிகள் ஒழுங்குசெய்து தாருங்கள் என்று அவன் அரசைக் கெஞ்சவில்லை — இருக்கின்ற புகைவண்டிப் பெட்டிகளுக்கும் தீவைத்ததாகத்தான் யாழ் இளைஞர் கைதுசெய்யப்படுகிறார்கள். யாழ்ப்பாணத்துக்கு நவீன சந்தையும் விளையாட்டரங்கும் கட்டிக்கொடுத்த மேயர் துரையப்பாவின் உடலைத் துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்து எடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டு ஏழு யாழ்ப்பாண இளைஞர்கள் இன்று நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். உயரிய சுதந்திரத்துக்காக அவன் ஊர் நலன்களை உதறி எறிய முன்வந்திருக்கிறான். இந்த உண்மையை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்தான் மட்டக்களப்பான் என்ற பிரச்சினையை யாரும் கிளப்பாதீர்கள்—என்றார்.



27-2-77ல மட்டக்களப்பு பாட்டாளி புரத்தில் கவிஞர் காசி ஆனந்தனை வரவேற்குமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் அலைகடலென திரண்டிருந்த மக்களிடையே ஆசியுரை வழங்குகிறார் வண. ஜோசெப் மேரி அடிகளார்.

## குவீபெக் பிரிவினை பற்றிகனடாபிரதமர்

குவீபெக் மாகாண மக்கள் கனடாவின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டித்துக்கொண்டு தனியாகப் பிரிந்து குவிபெக் தனி நாட்டை அமைப்பதென்று சுதந்திரமாகவும், ஜனநாயக ரீதியிலும் முடிவுசெய்தால் அதுபற்றி கனடா அரசு பரிசீலனைசெய்வது பயனுடையதாக இருக்கும். ஆனால் பலவந்தயாக, வன்முறைகள் மூலம் குவீபெக்கை கனடாவிலிருந்து பிரிக்க முயன்றால், முன்னைய காலங்களைப் போலவே அடக்குமுறையை ஏவி அதை கனடா அரசு நசுக்கும்"

இவ்வாறு கனடாப்பிரதமர் ரூடோ, குவீபெக் மாகாணப் பிரிவினைக் கிளர்ச்சி பற்றி டெலிவிசன் பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

(டெயிலி நியூஸ் 1-3-77)

## முத்தமிழ் விழா!

கட்டுப்பெத்தை வளாக தமிழ் மன்றத்தின் முத்தமிழ்விழா 6-3-77 ஞாயிற்றுக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் காலையும், மாலையும் நடைபெறும்.

## மட்டக்களப்பு தமிழ்இளைஞர்பேரவை பொதுக் கூட்டம்!

மட்டக்களப்பு தொகுதி தமிழ் இளைஞர் பேரவையின் பொதுக்கூட்டம் ஒன்று மட்டக்களப்பு தாமரைக் கேணி வீதி 2ம் குறுக்கு வீதியிலுள்ள 10ம் இலக்க இல்லத்தில் 12-3-77 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறும். மட்டக்களப்பு தொகுதியைச் சேர்ந்த அனைத்துக் கிராமங்களிலிருக்கும் இளைஞர்களும் இக்கூட்டத்துக்கு அழைக்கப்படுகின்றனர்.

## அரங்கேற்றம்



சிவகான ரஞ்சிதம், சங்கீத வித்துவான், செல்வி குலபூஷணி குலசேகரம் அவர்களின் வாய்ப்பாட்டு, வீணை அரங்கேற்றம் எதிர் வரும் 5-3-77 மாலை 6.30 மணிக்கு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.

## மீலாத் நல்வாழ்த்து!

சுதந்திரன் வாசக நேயர்களுக்கு நமது 'மீலாத்' நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறோம். —ஆர்





பாவியுங்கள் பளிச்சிடும் வெண்மைக்கு

ரோயல் நீலம்

நீலம் என்று கேளாது ரோயல் நீலம் என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள்.

தயாரிப்பாளர்: தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

சிவா இண்டஸ்றீஸ்

112-1/3, 4-ம் குறுக்குத் தெரு. கொழும்பு-11.

விநியோகஸ்தர்கள்!

சேகர் அன் பிறதர்ஸ்

கொழும்பு. தொலைபேசி: 35049

மில்க்வைற் செய்தி- வெளியீடு 15

15 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக்கேட்டட் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

விநியோகப்பகுதி:

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், த. பெ. எண். 77 யாழ்ப்பாணம்.

இப்போது விற்பனையாகிறது!

தமிழேந்தல் ஈழவேந்தன் எழுதிய

தமிழ்மண் காப்போம் தாயகம் மீட்போம்

பல புதிய தகவல்கள், வரலாற்றுக் குறிப்புக்கள், பல அரசியல் மேதைகளின் அறிவுரைகள், அம்பிட்டியா குருத்துவ கல்லூரியில் நூல் ஆசிரியர் நிகழ்த்திய உரை ஆகியவற்றை உள்ளடக்கிய

3-ம் பதிப்பு

அதிக பக்கங்கள் — விலைரூபா ஒன்று மட்டுமே

● பண்டிதர் கா. பொ. இரத்தினம் பா.உ. எழுதிய

தடுப்புக் காவலில் 10 நாள்கள்

—சுதந்திரன் வெளியீட்டகத்தின் 9வது வெளியீடு

இப்பொழுது விற்பனையாகிறது

விலை ரூபா ஒன்றுமட்டுமே

விபரங்களுக்கு தொடர்புகொள்க:

நிர்வாகி

சுதந்திரன் வெளியீட்டகம்
194 ஏ, பண்டாரநாயகா வீதி
கொழும்பு-12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவை தலைவராக ஏற்ற நீங்கள் இன்று இனஒற்றுமையைகுழப்பமுயல்வது ஏன்?

## சுந்தருக்கு காசி ஆனந்தன் சூடான பதில்!

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் தந்தை செல்வாவின் அரசியல் கொள்கைகளைக் கண்டித்தும், தந்தையின் அணியிலிருந்து பிரிந்து தனது அணியில் சேருமாறு கோரியும், திரு. சி. சுந்தரலிங்கம் அவர்கள் உணர்ச்சிக்கவிஞர் காசிஆனந்தன் அவர்களுக்கு விடுத்துள்ள பகிரங்க அழைப்புக்கு பதிலளித்து கவிஞர் காசிஆனந்தன் பகிரங்க அறிக்கையொன்றை பத்திரிகைகளுக்கு விடுத்துள்ளார். அந்த அறிக்கை வருமாறு:—**

''நீங்கள் எனக்கு அனுப்பிய பகிரங்கக் கடிதம் கிடைத்தது. அறுபது ஆண்டுகள் அரசியல் அனுபவம் உள்ள ஒருவரிடம் இருந்து வரும் கடிதத்துக்கு அடக்கத்தோடு பதில்தர நான் கடமைப்பட்டிருக்கிறேன்,

தந்தை செல்வா விரும்பினால் தேர்தலில் போட்டியிடுவேன் என்று வீரகேசரி நிருபர்கேட்ட கேள்வி ஒன்றுக்கு நான் பதில் அளித்திருந்தேன், எனது இக்கூற்றின் பொருள் என்ன? என்று உங்கள் பகிரங்கமடலில் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்.

என்னைப் பொறுத்தவரை சுயநல உணர்வுகள் என்றும் என்னைத்தொட்டதில்லை. பதவி ஆசைகளுக்கு நான் எந்தக் காலத்திலும் பலி ஆனதில்லை. ஆனல் பொதுத்தேர்தல் இன்றுள்ள ஈழத் தமிழர் விடுதலை உணர்ச்சியை உலகின்முன் நிறுத்துக் காட்டும் ஒரு தராசாக இச்சந்தர்ப்பதில் தோன்றுவதால் நான் தேர்தலில் நிற்க வேண்டும் என்று தமிழர் கூட்டணி என்னைக் கேட்கலாம் போல் தோன்றுகிறது. 'என்னைவிட்டு வேருெரு மனிதரைப் பாருங்கள்' என்றுதான் இந்த நிமிடம் வரை நான் கூறிவருகிறேன். ஆனல் ஓர் இயக்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் நிற்கும் நான் தந்தை செல்வா என்னைத்தேர்தலில் இறங்குமாறு பணித்தால் மீறமுடியுமா?

பிரதமர் தமிழர் விடுதலைக்கூட்டணியிலும் வெளியிலும் உள்ள தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களை மாநாடு ஒன்றுக்கு அழைத்திருந்தார். 'தமிழர் கூட்டணி பிரதமர் முன் விடுதலைக் குரலை முழங்கவேண்டும்! என்று நான் பத்திரிகை நிருபரின் ஒரு கேள்விக்குப் பதில் சொன்னேன். இந்த வார்த்தைகளின் அர்த்தம் என்ன என்பது உங்கள் அடுத்த கேள்வி.

'தமிழனுடைய தாயகமான தமிழ் ஈழம் முழுச் சுதந்திரத்தோடும் இறைமையோடும்வாழவேண்டும்' என்பதையே 'விடுதலைக் குரல்' என்று நான் குறிப்பிடுகிறேன். பிரதமர் கூட்டும் மாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை அழுத்தமாக எடுத்துச்சொல்ல வேண்டும் என்றே நான் வீரகேசரி நிருபரிடம் கூறினேன்.

தமிழ்ஈழ விடுதலைக் குரலை முழங்க எங்கு சந்தர்ப்பம் கிடைத்தாலும் தமிழர் அதைப் பயன்படுத்தத் தவறக்கூடாது.

சிறைமீண்ட தமிழ் இளைஞர் பொதுத்தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று சமீபத்தில் நீங்கள் செய்தி ஏடுகளில் அறிக்கை விட்டிருந்தீர்கள் சிங்களவனின் நாட்டில் உள்ள பாராளுமன்றத்தில் போய் —பிரதமர் முன்நின்று தமிழ் உறுப்பினர்கள் பேசுவதை நீங்கள் விரும்புகிறீர்கள் அப்படியானல் பிரதமர் அழைக்கும் ஒரு மாநாட்டில் போய் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'தமிழ்ஈழ விடுதலைக் குரலை' ஓங்கி ஒலிப்பதை ஏன் பிழை என்ற தோரணையில் பிரசாரம் செய்ய முற்படுகிறீர்கள்?

### என்னிடமா இக்கேள்வி?

பேச்சுவார்த்தைகள்மூலம் 'தமிழ்ஈழ விடுதலை' கிடைக்காது என்பது எமக்குத் தெரியும். ஆனல் தமிழ்ஈழ விடுதலைப்போரில் தமிழன் உறுதியோடு இருக்கிருன் என்பதை எமது பேச்சில் நாம் எடுத்துக்காட்ட இது ஒரு வாய்ப்பல்லவா? இம் மாநாட்டில் கூனல் முதுகுகளோடு நின்று பேசும் துரோகிகள் மத்தியில் நாம் நிமிர்ந்து நின்று விடுதலை வீரர்களாக முழங்கக்கிடைக்கும் வாய்ப்பை இழக்கக் கூடாது என்றே நான் கருதுகிறேன்.

'வாய்ப் பேச்சால் மாத்திரம் விடுதலைக் குரலை எழுப்பப் போகின்றீர்களா? என்று என்னிடம் நீங்கள் இன்னெரு கேள்வியைப் போட்டிருக்கின்றீர்கள். நான் எப்போதும் போர்க்களத்தில் நிற்பவன் என்பது தெரிந்தும் நீங்கள் இப்படிக்கேட்கலாமா? நீங்கள் வவுனியா தோட்டத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது நான் வெலிக்கடைக் கோட்டத்தில் உருக்குலைந்து கொண்டிருந்தேன். உங்கள் மனச்சாட்சியை மீறி ஏன் உதடுகளை அசைக்கின்றீர்கள்.

### தந்தை செல்வாவின் தகைமை

தந்தை செல்வா அவர்களை, நீங்கள் எனக்கு வரைந்த கடிதத்தில் தாக்கி எழுதியிருந்தீர்கள். நீங்கள், சிங்கள ஏகாதிபத்தியத்தின் அமைச்சராக இருந்தபோது விடுதலைப் போர்க் களத்தில் நின்றவர் தந்தை செல்வா. தமிழ் மக்களிடம் பெற்ற வாக்கை — கேவலமான மந்திரி பதவிக்கு அவர் எந்தக் காலத்திலும் தாரைவார்த்ததில்லை. மக்களிடம் வாக்குப் பெருத ஒருவரை — (திரு. திருச்செல்வம்) மாவட்ட சபை கொண்டுவரும் நோக்குடன் மந்திரியாக்கினர். தந்தை செல்வா சரியாகத் தெரிவுசெய்த அந்த மனிதர் உரிய வேளையில மந்திரி பதவியைத் தூக்கியெறிந்தார்.

மாவிட்டபுரம் கோவிலில் சிறுபான்மைத் தமிழர் தெய்வத்தை தொழவிடாது நீங்கள் மறித்துத் தடுத்தபோது—தமிழ்ஈழ விடுதலைப் போரில் 'தமிழர் ஒற்றுமையின்' முக்கியத்துவத்தை உணர்ந்த தந்தை செல்வா உங்கள் பக்கம் அல்ல — சிறுபான்மைத் தமிழர் பக்கமே நின்ருர். இச்செயல் மூலம் அவர் தமிழ்ஈழ விடுதலைப் போருக்கு உரம் ஊட்டினர்.

தந்தை செல்வா முன்பு சமஷ்டி அமைப்பு முறையைக் கோரியது மெய். கூட்டாட்சியின் அத்திவாரத்தில் என்ருே ஒருநாள் 'தமிழரசு' மலரும் என்று நினைத்தே 'தமிழரசுக்கட்சி' உருவாக்கப்பட்டது. படிப்படியான வளர்ச்சியின் பின் இன்று 'தமிழ் ஈழத்தின் பூரண விடுதலை' என்ற நிலைக்கு வந்திருக்கிருேம். இடையில் நிகழ்ந்த இரு ஒப்பந்தங்களும் (பண்டா—செல்வா—டட்லி—செல்வா) சிங்கள ஏகாதிபத்தியங்களின்திமிர்ப் போக்கினை உலகுக்கு எடுத்துக்காட்ட பெரிதும் துணை நிற்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

### செல்வாவை தலைவராக நீங்களே ஏற்றீர்கள்

உலகம் அனுதாபத்தோடு எங்கள் விடுதலைப்போரை நோக்கும் அளவுக்கு ஈழத் தமிழ் நாட்டின் விடுதலை இயக்கத்தைத் தந்தை செல்வா முறையாக வளர்த்திருக்கிருர்.

பழைய கதைகளை விடுவோம். 1972இல் தமிழர் கூட்டணி உருவாகியபோது தந்தை செல்வாவின் தலைமையில் அமைந்த அந்த இயக்கத்தில் நீங்களும் ஒருவராக இருந்திர்கள். தந்தை செல்வாவின் தலைமையை ஏற்றுக்கொண்ட அச்சந்தர்ப்பத்தில் நீங்கள் உங்கள் மதிப்பை இழக்கவில்லை— கூட்டிக்கொண்டீர்கள். தந்தை செல்வா காங்கேசன் துறை இடைத்தேர்தலில் நின்றபோதும் அவரை ஆதரித்து மேடைகளில் முழக்கமிட்டீர்கள். இன்று எனக்கு எழுதியுள்ள பகிரங்க மடலில் 23 வருடங்களாக தந்தை செல்வா பிழைவிட்டிருக்கிருர் — என்னேடு வாருங்கள்' என அழைக்கிறீர்கள் — இது என்ன நியாயம்?

தமிழர் விடுதலைக் கூட்டணி ஈழத் தமிழர்களின் ஒற்றுமைச்சின்னமாகஇன்று விளங்குகின்றது. தமிழினத்தின் ஒற்றுமையை நெருக்கடி நிறைந்த இக்கால கட்டத்தில் சிதைக்காதீர்கள் என்று பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

# புத்தளத்தில் புத்தெழுச்சி!

இந்திய உபகண்டத்தில் பாகிஸ்தான் பிரிவினை கோரி ஜின்ஞ அவர்கள் போராடியபோது — அவர் கோரிய பாகிஸ்தான் பிரதேசத்துக்குள் சேராத— பாகிஸ்தானுக்கு வெளியே வாழ்ந்த முஸ்லிம்கள் அனைவரும் ஜின்ஞவின் கோரிக்கையை முழுக்க முழுக்க ஆதரித்து அவர் பின்னல் அணிதிரண்டு நின்றனர் இப்படி நின்றதற்குக் காரணம், பாகிஸ்தான் என்று தனிநாடு ஒன்று முஸ்லிம்களுக்காக உருவானல் மட்டுமே இந்தியாவில் வாழும் முஸ்லிம்களும் தலைநிமிர்ந்து வாழமுடியும் என்ற அந்த அடிப்படை நோக்கம்தான். அதே போல தமிழ்பேசும் மக்களுக்கென சுதந்திரத் தமிழ் ஈழம் உருவாகினல் மட்டுமே தமிழ் ஈழத்துக்கு வெளியே வாழும் தமிழ் பேசும் மக்களும் அச்சமின்றி தலைநிமிர்ந்து வாழமுடியும். அந்த அடிப்படையில்தான், அனைத்திலங்கையிலுமுள்ள தமிழ் பேசும்மக்களை தந்தை செல்வாவின் தலைமையில் தமிழ் ஈழம் கோரி தமிழர் விடுதலைக்கூட்டணி நடத்துகின்ற விடுதலை இயக்கத்தின் பின்னல் அணிதிரளுமாறு கேட்டுக்கொள்ளுகிருேம்!''

இவ்வாறு புத்தளத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் பேசிய கூட்டணியின் செயல்

## பல ஆயிரக்கணக்கான முஸ்லிம்களிடையே கூட்டணித் தலைவர்கள் உரிமை முழக்கம்!

அதிபர்களில் ஒருவரான திரு. மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

இக்கூட்டம் 26-2-77மாலை புத்தளம் செட்டித்தெருவில் நடைபெற்றது. கூடடத்துக்கு புத்தளம் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைத் தலைவர் டாக்டர் ஜனுப் இதுரூஸ் எம். இல்யாஸ் தலைமை வகித்தார். புத்தளத்தில் அண்மைக்காலத்தில் நடந்த ஒரு கட்சிக்கூட்டத்துக்கும் திரண்டிராத அளவு பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஆர்வமுகத்தினராய், உணர்ச்சியலை பொங்க, உதயசூரியன் கொடியின்கீழ் அங்கு அணிதிரண்டிருந்த காட்சி, புத்தளம் புதிய வரலாறு படைக்கவிருப்பதற்கு சாட்சியாக அமைந்திருந்தது.

புத்தளத்தில் இவ்வளவு மக்கள் கூட்டம் அண்மைக் காலத்தில் வேறு எந்தக் கூட்டத்துக்கும் திரண்டதில்லையென்று அங்கு நின்ற பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

மாணவன் ஜனுப் பிஸ்ரூல் அமீன் கிருஅத் ஓதியதை அடுத்து கூட்டம் ஆரம்பமாகியது. ஜனுப் எம். எஸ். எப். [illegible] நிகழ்த்தினர்.

டாக்டர் இல்யாஸ் தனது தலைமையுரையில் கூறியதாவது:-

“புத்தளம் தமிழ்பேசும் இஸ்லாமிய மக்கள், சிங்களக் கட்சிகளை ஆதரிப்பதால் பிரயோசனமில்லையென்பதை அறிந்துவிட்டார்கள். சிங்களக் குடியேற்றத்தாலும், அரசாங்கத்தின் பௌத்த சிங்களவெறிக் கொள்கையினுலும் புத்தளம் பறிபோய்க்கொண்டிருக்கிறது. இந்த நிலையைத் தடுத்து நிறுத்த தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் சேர்ந்து போராடுவது தவிர வேறு நமக்கு வழியில்லை.

“சென்ற ஆண்டு புத்தளத்தில் பயங்கர இனக்கலவரம் ஏற்பட்டு, முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது — அவர்களது சொத்துக்களுக்கு தீ மூட்டப்பட்டபோது — அதை எதிர்த்து முதற்குரல் கொடுத்ததுடன் பகிரங்க விசாரணைக்குழுவை நியமிக்கும்படி கோரியவர் மூதறிஞர் தந்தை செல்வா அவர்களே. தமிழ்பேசும் மக்கள் எங்கு இன்னலுற்ருலும் அதைதட்டிக்கேட்பது தமிழர் விடுதலைக் கூட்டணியொன்றே. தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு சார்பாக உலக நாடுகளில் தூதராக விளங்கும், உலகத்தமிழ் இளைஞர்பேரவைத் டாக்டர் ஜனர்த்தனன், புத்தளம் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைபற்றி உலகெங்கும்அறிவித்தார்தேசிய அரசுப்பேரவையில் புத்தளத்தில் நடைபெற்றகொடுமைகளை எதிர்த்து கூட்டணி பா. உ. தர்மலிங்கமே உரை நிகழ்த்தினர்.

‘‘தொகுதி நிர்ணயக் குழுவின் அறிக்கை வந்த பின்னர் — பெரும்பாலான சிங்கள வாக்குகள் புத்தளம்

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● ஒரு கருத்து

# பொதுத்தேர்தலில் தமிழ் ஈழத்துக்கு வெளியே வேட்பாளர்களை நிறுத்தத்தான் வேண்டுமா?

## நிறுத்தினால் இயக்கத்துக்கு நன்மையா? தீமையா?

**அடுத்த பொதுத்தேர்தலில் இலங்கையில் தமிழ்ஈழப் பகுதி அல்லாத ஏனைய இடங்களில் வாழும் தமிழ் மக்களும் தமிழ்நாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு கொழும்பு போன்ற தமிழ் மக்கள் கணிசமாக வாழும் பகுதிகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வேட்பாளர்களை நிறுத்தவேண்டும் என்று தமிழ் மக்களில் சிலர் அபிப்பிராயப்படுவதாகவும் அறியப்படுகின்றது.**

இப்பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனது வேட்பாளர்களை நிறுத்துவதினால் பலன் ஏற்படுமா என்பதைச் சற்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது,

அடுத்த பொதுத் தேர்தல் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு முக்கியமான தேர்தலாகும. இத்தேர்தல் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி உலகில் பரந்து வாழும் தமிழ் மக்கள் அத்தனை பேருக்கும் ஒரு முக்கியமான சம்பவம் என்றும் சொல்லலாம். ஏனெனில், இந்தத் தேர்தலில் தான் உலகத்தில் முதலாவது ஏற்படக்கூடிய ஒரு தமிழ் நாட்டுக்கு ஆதாரமாக தமிழ் மக்கள் தங்களுடைய சுயநிர்ணய உரிமையை வாக்கெடுப்பின் மூலம் வெளிக்காட்டும் சந்தர்ப்பம் ஏற்படப்போகின்றது. ஆகவே, இலங்கைவாழ் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் தங்களுடைய ஒற்றுமையையும் குறிக்கோளையும் எதுவித ஐயத்துக்கும் இடமின்றி உலகுக்கு எடுத்துக் காட்டவேண்டியிருக்கின்றது.

### தமிழர் 'கடமை

இதை, இலங்கைவாழ் தமிழ் மக்கள் எப்படி எடுத்துக்காட்டலாம்? தமிழ்நாடு கேட்கப்படுகின்ற பகுதிகளில் இருந்து தெரிந்து எடுக்கப்படும் ஒவ்வொரு பிரதிநிதியும்—ஒருவர் தவறுமல் — தமிழ்நாடு கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளராக விருக்க வேண்டும். அதுமட்டுமன்றி ஒவ்வொரு வேட்பாளரும் தனது தொகுதியின் அதிகப்படியான வாக்குகளால் தெரிந்தெடுத்து அனுப்பப் படவேண்டும்.

இதுவே இலங்கைவாழ் தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் முக்கிய குறிக்கோளாக இருக்கவேண்டும். கூட்டணி வேட்பாளர்களுக்கு எதிராகப் போடப்படும் ஒவ்வொரு வாக்கும் —அது எந்தக் காரணத்துக்காகப் போடப்பட்டாலும் — தமிழ்நாட்டுக் கொள்கைக்கு எதிராகப் போடப்பட்டது என்றே எடுத்துக் காட்டப்படும்! ஆகவே, தமிழ்ஈழப் பகுதிகளில் வாழும் ஒவ்வொரு தமிழ் மக்களின் வாக்குகளும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களுக்கே போடப்படவேண்டும்; போடப்படச் செய்யவேண்டும். இதற்கு இலங்கைவாழ் தமிழ் மக்களின் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பும் முயற்சியும் உதவியும் வேண்டும். குறிப்பாக ஈழத்தமிழ்ப் பகுதிக்கு வெளியில் இருக்கும் மக்களின் உதவி மிகவும் தேவைப்படும். நல்ல பலனை அளிக்கும்.

### எது முக்கியம்?

இப்படி இருக்கும்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பு போன்ற பகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தி ஒருவழிப்பட்டு ஒன்றுபடுத்தி ஆற்றவேண்டிய தனது முயற்சியை வீண் விரையம் செய்யவேண்டுமா? தேர்தல் காலத்தில் தமிழ்ஈழப் பகுதிகளுக்குச் சென்று தம் உறவினர்கள், நண்பர்கள், ஊரவர்கள் முதலிய எல்லோரையும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளருக்கு வாக்களிக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபடுவதை விட்டுவிட்டு கொழும்பு போன்ற பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் தமிழ் நாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அங்கு வாழும் தமிழ் மக்கள் தம் நேரத்தையும் சக்தியையும் உழைப்பையும் செலவு செய்யவேண்டுமா? இதில் எது முக்கியம்?

### பயனுண்டா?

தமிழ் நாடு கேட்டுப்போரிடும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களுக்கு எதிராக விழக்கூடிய வாக்குகளை விழாமல் தடுப்பதற்கு முயற்சி செய்யாமல் கொழும்பு போன்ற பகுதிகளில் தமிழ்நாடு கோரிக்கைக்கு ஒரு சில ஆயிரம் வாக்குகளை எடுத்துக் காட்டுவதினால் பயன் என்ன? பல காரணங்களுக்காக தமிழ் மக்களின் சனத்தொகையில் கணிசமான அளவு வாக்குகள் அப்படி நிறுத்தப்படும் படும் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளருக்குக் கிடைக்காமல் போய்விட்டால் கொழும்புபோன்ற பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தமிழ் ஈழக்கொள்கையை ஆதரிக்கவில்லை என்று மாற்றார் எடுத்துக் காட்டக்கூடிய ஆபத்தும் இதனால் ஏற்படக்கூடும்.

இப்பகுதிகளிலிருந்து ஓர் இரு வேட்பாளர்கள் வெற்றி பெற்றால்கூட தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்கள் ஓரிருவர் தோற்று விட்டாலோ, அன்றி அவர்களுக்கு எதிராக கணிசமான வாக்குகள் விழுந்து விட்டாலோ இவ் ஓரிரு வெற்றிகள் கூட அவற்றை ஈடு செய்யமாட்டா. தமிழ்ப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தமிழ் நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு இல்லை என்று எமது விரோதிகள் எடுத்துக் காட்டுவதற்கு ஏதுவாகவிருக்கும்.

### திசை திருப்பும்

தமிழ் ஈழத்துக்கு வெளியில் உள்ள பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை நிறுத்தினால், தமிழ் ஈழத்தில்வேலை செய்யவேண்டியவர்கள் அங்கு வேலை செய்வதைக் குறைத்து இப்பகுதிகளுக்கும் சென்று தமது நேரத்தையும் சக்தியையும் செலவழிக்கவேண்டி ஏற்படுவதோடு இப்பகுதியில் வாழும் உண்மையான, உற்சாகமான தொண்டர்கள் இரண்டு வீட்டு நாய் போல இரண்டு வீட்டுக்கு மிடையில் ஓடித் திரிவதுதான் மிச்சமாகும். இரண்டு வீட்டு நாய் ஒரு வீட்டையும் காவல் செய்யாது என்பது எல்லாருக்கும் தெரிந்த உண்மையல்லவா?

ஈழத் தமிழ்ப் பகுதிக்கு வெளியிலும் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர்களை நிறுத்துவது ஒரு குறிக்கோளை நோக்கிச்செல்லும் எருதுக்கு இடையில் நின்று சிவப்புக்கொடி காட்டி அதைத் திசை திரும்புவதைப்போன்றதாகும்.

ஈழத் தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு தொகுதியிலும் தமிழ்நாடு கேட்டுப் போட்டியிடும் ஒவ்வொரு தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரும் இவற்றில் வெற்றி பெறவேண்டும்; வெற்றி பெறச்செய்யவேண்டும். அவர்கள் அப்படி வெற்றி பெற்றுத் தமிழ் நாடு அமைத்தால் வெளியிலுள்ள தமிழ் மக்கள் மட்டுமல்ல பறங்கியர்போன்ற ஏனைய சிறுபான்மையினரும் கூட தமிழ்நாட்டை ஆதரிப்பர்; அங்கு வந்து குடியேறுவர். ஏன், இன்று இந்த நாட்டைவிட்டு வெறியேறிக்கொண்டிருக்கும் சிங்கள மக்களில் சிலரும் அங்கு வருவதற்கு விரும்புவார். ஆகவே ஈழத் தமிழ் நாட்டைத் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஈழத் தமிழ் நாட்டில் நடைபெறவிருக்கும் தேர்தலில் ஈழத்தமிழ் நாடுகோரிப் போட்டியிடும் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் அத்தனை பேரையும் தெரிந்தெடுத்து அனுப்ப வேண்டியதே முக்கியமும் அவசியமுமானதாகும்.

### புனிதப்போர்

அப்படி என்றால், ஈழத் தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ள கொழும்பு போன்ற பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் தமது வாக்குகளை யாருக்குப் போடுவது என்ற ஒரு கேள்வி எழுவது இயல்பே.

இலங்கையில் மாறிமாறிப் பதவிக்கு வந்துகொண்டிருக்கும் இரண்டு கட்சிகளில் எந்த ஒரு கட்சியாவது அடுத்த தேர்தலில் அதிகப்படியான பெரும்பான்மையோடு வெற்றிபெறாமல் இருக்கும்படி இப்பகுதி மக்கள் தங்கள் வாக்குகளைப் பிரயோகிக்கவேண்டும். அது, தமிழ் ஈழக் கோரிக்கைக்கு ஆற்றக்கூடிய பெரிய உதவியாகும்,

எதிரியை யுத்த களத்தில் வெல்வதற்கு வெளியில் அவனைப் பலவீனப்படுத்துவதும் அவசியம். அந்தப் பணியை அடுத்த பொதுத்தேர்தலில் ஈழத்தமிழ் நாட்டுக்கு வெளியில் வாழும் தமிழ்மக்கள் செய்யவேண்டும்.

அடுத்த தேர்தல் தமிழ் மக்களுக்கு ஒரு முக்கியமான தேர்தல் மட்டுமல்ல; அது ஒரு போர் என்றுதான் சொல்லவேண்டும். இரத்தம் சிந்தாத ஒரு புனிதமான போர். ஆணும் பெண்ணும், குமரனும் குமரியும் கிழவனும் கிழவியும், நோயாளியும் திடகாத்திரனும் பங்குபற்றும் உரிமைப் போர்; புனிதப்போர். அது நிகழும் இடம் தமிழ்ஈழப் பகுதி. அதில் பங்குபற்றுகின்றவர்கள் அங்கு வாழ்கின்றவர்கள். அவர்களுக்கு உற்சாகமளித்து உதவி செய்யப்போகின்றவர்கள் தமிழ் ஈழத்துக்கு வெளியில் வாழும் தமிழ் மக்கள், ஏன், உலகமனைத்தும் வாழுகின்ற மக்கள்.

வாழ்க தமிழ்!

வெல்க தமிழ்ஈழம்!!

—ஓர் அவதானி

---

## தமிழர் விடுதலை.

—2-ம் பக்கத் தொடர்

பேசுவதற்கு அனுமதிக்கவில்லை. மாணவர் பேரவையின் முடிவை மற்ற எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். சுயாட்சிக் கழகத்தலைவர் திரு. வி. நவரெத்தினம் ஒருவரே எப்படியும் அக்கூட்டத்தில் பேசத் தமக்கு ஒரு சந்தர்ப்பம் தரவேண்டும் என்று அடம்பிடித்தார். தமிழ் மாணவர் பேரவை விட்டுக் கொடுக்காது. தனதுபொதுக் கூட்டத்தை கட்சிச்சார்பற்றதாகவே நடத்தியது.

"அதன் பின் அவரது இல்லத்தில் அவரைப் பொதுப் பிரச்சினைபற்றிச் சந்திக்கச் சென்றபோது தமிழரசுக் கிளையுள்ள ஊர்தோறும் சுயாட்சி கிளைகள் அமைக்கப் படவேண்டும் என்றும் 'சுதந்திரன்' விற்பனையாகும் கடைகள் எங்கும் 'விடுதலை'யும் இடம்பெறவேடுண்ம் என்றும் கூறினார். மனிதன் எத்தனை சுயநலவாதி என்பதை அன்றே உணர்ந்துகொண்டேன். அதன்பின் நான் அங்கு சென்றதில்லை. இதனை அவர் மறுக்கமுடியாது என்பதற்கு ஒரு சவாலாகவே கூறுகிறேன்.

போராட்டங்கள், அர்ப்பணிப்புக்கள் இரத்தம் சிந்துதலின்றி தமிழ்ஈழம் மீளப் போவதில்லை. தேர்தல்களாலும் பாராளுமன்றம் செல்வதாலும் தமிழ்ஈழத்தை தோற்றுவிக்கமுடியாது. அதற்காக தேர்தலே வேண்டாம் என்று நான் கூறமாட்டேன். தேர்தல் நடக்கத்தான் வேண்டும்; ஆட்சிமன்றம் போகத்தான்வேண்டும். இனவிரோதிகள் ஆட்சிமன்றம் செல்வதைத் தடுப்பதற்கு தேர்தலை நாம் சந்திக்கத்தான் வேண்டும்.

ஆட்சிமன்றம் ஒரு நல்ல மேடை, தமிழ்ஈழத்தில் நடைபெறும் சிங்கள ஏகாதிபத்திய காலனி ஆட்சியையும் தமிழ்ஈழப் போராட்டத்திலீடுபட்டிருக்கும் இளைஞர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் [illegible] முறைகளையும் உலகிற்கு அம்பலப்படுத்தவேனும் ஆட்சிமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் இருக்கவேண்டும்.

ஆனால் தமிழ் இளைஞர்களுக்கு தேர்தல் ஆசை வேண்டாம். அவர்களுக்கு ஆயிரம் பணிகள் காத்திருக்கின்றன. ஆகவே தமிழ் இளைஞர்களைப் பொறுத்தமட்டில் தேர்தல்களில் அவர்களுக்கு விருப்பமோ நாட்டமோ இருக்கக்கூடாது. இதுவே எனது தீர்க்கமான கருத்தாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். தமிழ்ஈழத்தின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்துப் போராடும் தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவர்களின் அன்புக் கட்டளைக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, காத்து தமிழ் இளைஞர் பேரவை பொறுப்போடு நடக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தளத்தில்...

—6-ம் பக்கத் தொடர்

தொகுதியிலிருந்து வேறு தொகுதிக்கு மாற்றப்பட்ட பின்னர்தான் — முஸ்லிம்களின் உரிமை காப்பவர் போல நயினுமரிக்கார் இந்தப் பிரச்சினைபற்றி தேசிய அரசப்பேரவையில் பேசினுர். சிங்கள வாக்குகள் தனக்கு இல்லாமல் போய் விடுமேயென்று பயந்து, முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்காமல் பயந்து ஒதுங்கியிருந்த அவர், முஸ்லிம்களுக்காக இப்போது குரல் கொடுப்பது வேடிக்கையானது!''

உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில்—பாலஸ்தீனர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி மாருனது என்று சிலர் பொய்ப் பிரசாரம் செய்து வருவதாகவும், 1960ம் ஆண்டு கெய்ரோ மாநாட்டின்போதே பாலஸ்தீனர்களுக்காக தாம் குரலெழுப்பியதாகவும் தெரிவித்தார்.

சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் பேசுகையில் — லிபியா ஜனுதிபதி கேணல் கடாபி கூட்டுச்சேரா மாநாட்டுக்கு வருகை தந்த நேரத்தில, இழந்த நாட்டை மீட்பதற்கு ஒரு இனம் போராடுவது முழுக்க முழுக்க நியாயமானது என்று கூறியிருக்கிறுர்;அந்த வழியிலேயே, இழந்த தமிழ் ஈழத்தை மீட்பதற்கு நாம் போராடிவருகிறேும்; சுரண்டலற்ற — மதசார்பற்ற—சமத்துவம் திகழும் தமிழ் ஈழத்தை உருவாக்கி, அங்கு எல்லா மதங்களுக்கும் சமத்துவம் அளித்து—எல்லா மக்களும் சமஉரிமையுடன் வாழ முஸ்லிம்களும் தமிழர்களும் இணைந்து போராட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஈழவேந்தன் பேசுகையில்—வாழ்வு நடத்துவதற்கு வியாபாரம் தேவை; ஆனுல் அதற்காக வாழ்வே வியாபாரமாகிவிடக்கூடாது; முஸ்லிம் மக்களின் வியாபாரத்துக்கும், அவர்கள் வாழும் நிலத்துக்கும் ஆபத்து ஏற்பட்டு விட்டது. எனவே ஜின்ஞவின் வழியில் நிற்கும் கூட்டணியுடன் முஸ்லிம்களும் இணைந்து தமிழ் ஈழத்தை அமைக்கவேண் என்றுர்.

சிறைமீண்ட மாவை சேனுதிராசா, வண்ணை ஆனந்தன், ஆ. ரகுபதியால சிறீதரன், எஸ். கே. மகேந்திரன் டாக்டர் உதுமாலெப்பை, சட்டமாணவர் இப்திகார் புகாரி, மு. ஞானேந்திரன் ஆகியோரும் பேசினர்.

## ஊரெழுவில் கூட்டணி அமைப்பு கூட்டம்

கோப்பாய்த் தொகுதியிலுள்ள ஊரெழுவில் கூட்டணிக்கிளை அமைப்புக் கூட்டம் 7-3-77 திங்கட்கிழமை மாலை ஊரெழுபிள்ளையார் கோவில் வீதியில் நடைபெறும். கோப்பாய் பா. உ. சி. கதிரவேற்பிள்ளை உட்பட பலர் உரையாற்றுவர்.

## இடைக்கால ஏற்பா....

—1-ம் பக்கத் தொடர்

க. உமாமகேஸ்வரன், தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளையை சேர்ந்த ஆ. ரகுபதிபாலசிறீதரன், தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக்கிளையை சேர்ந்த திருமதி ஊர்மிளா, காங்கேசன்துறை தமிழ் மகளிர் பேரவை கிளையை சேர்ந்த செல்வி. கலைநிதி தேவா, தமிழ் இளைஞர் பேரவையின் அமைப்புச் செயலாளர் சேனுதிராசா, நிர்வாகச் செயலாளர் சிவமகாராசா, வண. ஜோசெப்மேரி அடிகளார், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் ஆகியோருட்பட பலர் இடம்பெற்றிருந்தனர்.

## வந்தாறுமூலையில் வரவேற்பு விழா!

சிறைமீண்ட தமிழ் இளைஞர்களை வரவேற்குமுகமாக வந்தாறுமூலை நிர்முகப் பிள்ளையார் கோவில் வீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை (6-3-77) மாலை மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. இக்கூட்டத்துக்கு திரு. தா. பரசுராமன் (கலை இளவல்) தலைமை தாங்குகிறுர். கவிஞர் காசிஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவை சேனுதிராஜா ஆகியோரும், கூட்டணித் தலைவர்களும் பிரமுகர்களும் உரையாற்றுகிறுர்கள்.

## ஆரையம்பதியில் வரவேற்பு விழா!

மட்டக்களப்பு தொகுதியை சேர்ந்த ஆரையம்பதியில் 5-3-77 சனிக்கிழமை மாலை சிறைமீண்ட கவிஞர் காசிஆனந்தனுக்கும், ஏனைய இளைஞர்களுக்கும் வரவேற்பு விழா நடைபெறுகிறது. காசிஆனந்தன், மாவை சேனுதிராசா, வண்ணை ஆனந்தன் ஆகியோரும் கூட்டணிப் பிரமுகர்களும் உரையாற்றுகிறுர்கள்.


செல்லமகால் கடைசி வாரம்

கமலஹாசன், ஸ்ரீவித்யா, ஜெயசுதா, சுந்தரராஜன் நாகேஷ் நடித்த-



கே. பாலச்சந்தரின்

அபூர்வ ராகங்கள்

கெயிட்டி 2வது வாரம்

கண்ணப்பா, அஞ்சலிதேவி, முத்துலட்சுமி, காக்கா ராதாகிருஷ்ணன், மு. கருணாநிதி நடித்த—

டவுன் பஸ்

(புத்தம் புதிய கொப்பி)

றீகல் (மட்டுநகர்) 2வது வாரம்

ஜெய்சங்கர்—சாவித்திரி -நடித்த-

தாய்க்கொரு பிள்ளை

கிங்ஸ்லி

முத்துராமன், ஏ. வி. எம். ராஜன், லதா, நிர்மலா, சோ, மனேரமா நடித்த-

வீட்டுக்கு வந்த மருமகள்

13-வது வாரம்

கெப்பிட்டல் - விஜயா (மட்டுநகர்)

எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா, [இரு வேடங்களில்] சந்திரகலா நடித்த-

உலகம் சுற்றும் வாலிபன்

(ஈஸ்ட்மன் கலர்)

லிடோ (யாழ்நகர்)

சிவகுமார், ஜெயசித்திரா நடித்த-

வெள்ளிக்கிழமை விரதம்

(புதிய கொப்பி) (கலர்)

பிளாசா

தெய்வம் (கலர்)

(புத்தம் புதிய கொப்பி)


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1977-ம் வருடம் பங்குனி மாதம் 6-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org